பண்டாரவளை பிரதேசசபை
பதுளை மாவட்டம்

-----------------------------------

1. நிதி கூற்று

1.1 நிதி கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019ஆம் வருடத்தின் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே மாதம் 31 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 திகதியும் தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 நிலை கணக்கிடப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் நிலைக்கணக்கிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகள் தவிர நிதிக்கூற்றுக்களினால் 2018 டிசம்பர் 31 திகதிக்கு பண்டாரவளை பிரதேசசபையின் நிதி நிலை மற்றும் அத்தினத்துடன் முடிவடையும் வருடத்திற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிட்டு நியதிகளுக்கவமவான உண்மையானதும் நியாயமானதுமான நிலையை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலை கணக்கிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கியல் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செயற்படுத்தப்படாத மூள்று வேலைகளுக்கான செலவு ரூ. 236,356 கணக்கிடப்படவில்லை | கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன். |
| (ii) | கடந்தாண்டுக்காக அறவிடப்படாத நிதிமன்றத்தண்டப்பணம் ரூ.113,558 கணக்குபொருத்தப்பாட்டுடையதாக இருக்கவில்லை. | கணக்குசரிசெய்யப்படவேண்டும். | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன். |
| (iii) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்குகிடைக்கவேண்டிய நிதிமன்றதண்டப்பணம் மூலமான வருமானம் ரூ.1,918,396 ஆனது.ரூ1,741,839 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்குசரிசெய்யப்படவேண்டும். | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன். |
| (iv) | மிளாய்வுசெய்யப்பட்டவருடத்திற்காக கிடைக்கவேண்டியமுத்திரைக்கட்டணம் னவருமானம்ரூ.14,905,400 ரூ.14,458,238 ஆக காட்டப்பட்டுப்பட்டுள்ளது. | கணக்குசரிசெய்யப்படவேண்டும். | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மிளாய்வுசெய்யபப்ட்ட வருடத்திற்காக நிலையான வைப்பு கணக்கிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூ.306,805 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குசரிசெய்யப்படவேண்டும். | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன |
| (vi) | மிளாய்வுசெய்யபப்ட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட முதலிடு ரூ.10,306,805 தொகையானது கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்குசரிசெய்யப்படவேண்டும் | வருங்காலத்தில் நிவர்த்திப்பேன |

(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலமான ஆதாரங்கள் இருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ.20,091,031 மொத்த பெறுமதியுடைய இரு ஆதன விடயங்கள் மற்றும் ரூ.4,972,989 பெறுமதியான பலவித வைப்பு மிகுதிகளுகளுக்கான உறுதி வரைபடம் பெறுமவதற்காக உத்தரவு விரிவான உபஅட்டவனை மற்றும் நிலையான சொத்து பதிவேட்டை சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமான உண்மைவெளிப்பாட்டை பெற முடியவிலலை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மிகுதியை உறுதிசெய்யும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது ஆதாரங்களை சமர்பிப்பிக்கின்றேன். |

1.4 <u>அமைவாக இல்லாமை</u>

சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ திர்மானங்களுக்கு அமைவாக இல்லாமை

| சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ திர்மானங்களுக்கு கவனம் செலுத்தல் | அமைவாக இல்லாமை | பரிந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) 1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் 47 (1) மற்றும் 49 (ஆ) பிரிவு | 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் சபை அனுமதித்த புதிய கட்டிட நிர்மானங்கள் 208 இல் 173 இற்காக இசைவுச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிட நிர்மானங்களுக்காக சபையின் அனுமதியை பெற வேண்டும். | சட்ட ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கையெடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| ( அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையில் ஒஓளை அத்தியாயத்தின் 4.6 பிரிவு | இடமாற்றம் றெ்றுச்சென்ற மற்றும் வேலையை விட்டு விலகிச்சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூ.457,637 நிலுவை கடன் மிகுதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மிகுதி அறவிடப்பட வேண்டும். | சட்ட ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கையெடுப்பேன். |
| ( இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 396 (ஈ) | 06 மாதகாலத்தை விஞ்சிய கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூ.18,413 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதிகளுக் கமைய நடவடிக்கையெடு க்க வேண்டும். | சட்ட ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கையெடுப்பேன். |

2. நிதி மிளாய்வு

2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய மிளாய்வுசெய்யப்பட்ட டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடியடைந்த வருடத்திற்காக மிண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.13,342,374 தொகை காணப்பட்டதுடன் அதையொத்து பார்க்கும் போது கடந்தாண்டில மிண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.15,306,215 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானமும் நிலுவை வருமானம்

மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் கடந்தாண்டுக்கும் உரிய வகையில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமாளம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப் பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | 7திசம்பர் 311 திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம | புட்டியலிடப் பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | 7திசம்பர் 311 திகதிக்கு மொத்த நிலுவை |
| | --- | ------ | ----- | ----- | ----- | ------ | ----- | ----- | ----- |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| i. | சோலை வரி | 274,000 | 274,000 | 458,492 | 856,840 | 287,200 | 287,200 | 353,522 | 890,892 |
| ii. | அனுமதப்பத்திர கட்டணம் | 500,000 | 500,000 | 449,650 | 50,350 | 290,000 | 290,000 | 450,222 | - |
| iii. | பிற | 6,400,000 | 6,400,000 | 17,589,104 | 4,255,271 | 4,494,200 | 4,494,200 | 19,128,423 | 12,311,069 |
| | மொத்தம் | 7,174,000 | 7,174,000 | 18497,246 | 5,162,461 | 5,071,400 | 5,071,400 | 19,932,167 | 13,201,961 |

2.2.2 வருமானம் திரட்டும் செயலாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| (அ) மிளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.7,174,000 தொகை வருமானத்தில் ஆண்டு முடிவடையும் போது ரூ. 5,162,461 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 72 வீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அனைத்து நிலுவை வருமானமும் அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| ( ஆ) ஒரு வருடத்திற்கு அதிகமான காலமாக காணப்படும் ரூ..23,723,225 தொகையை மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயரிக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் வருமானத்தை அறவிட நடவடிக்கையெடுப்பேன். |

2.2.3 நிதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

(அ) நிதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நிதிமன்ற தண்டப்பணமாக ரூ. 1,918, 396மற்றும் முத்திரைக்கட்டணமான ரூ. 14,458,238 அறவிடப்படவில்லை. | நிலுவை நிதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நிதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் என்பன அறவிட நடவடிக்கையெடுப்னே். |

3. செயற்பாட்டு மிளாய்வு

3.1 செயலாக்கம்

பிரதேசசபை சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உள்ள பொதுமக்கள் சுகாதாரம் பொதுபயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடய்ஙகளை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி ஆகியன சபையினால் செய்யப்பட வேணடியிருந்த விடயங்கள், இவை நிறைவேற்றப்படுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழக்காட்டப்படுள்ளது.

) அ (உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| பிரதேசசபை சட்டத்தின் 126 பிரிவிற்கமைய பிரதான விடயங்கள் 30 ஐ நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் மிளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது ஏழு விடயங்கள் இற்காக உபவிதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. தழுவியும் இருக்கவில்லை | உபவிதிகள் ஆக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் ஆக்கப்பட வேண்டும். | 2019 வருடத்தில் உபவிதிகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிப்பது தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையில் இனங்கண்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கம் தொடர்பான குறிக்காட்டிகள் இனங்காணப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கத்தை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதற்கமைவாக வருடாந்த இலக்குகளை அடைவதற்காக விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களைதயாரிப்பதற்காக அலுவலர்களுக்கு அறிவுத்தப்பட்டுள்ளது. |

3.2 <u>மனிதவள முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 04 பதவிகளுக்காக 05 மேலதிக பயணியாளர்கள் அனுமித்ப்பட்டிருக்கவில்லை. வெற்றிடமொன்று நிரப்பப்பட்டிருக்கவில்லை. | புணியாளர்களை அனுமதித்துக்கொள்ள வேண்டும். | மேலதிக பணியாளர்கள் மற்றும் பற்றாக்குறை நிலவும் பதவிகளுக்காக வெற்றிடங்களை நிரப்பி நல்ல மட்டத்தில் ஆளணியினை பேணுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

3.3 <u>முகாமைத்துவத்தின் விணைதிறனற்ற தன்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு அதிகமான காலமாக காணப்படும் செலவு கடன்கொடுத்தோர் தொகை ரூ. 399,523 மற்றும் வேலைகள் தொடர்பான கடன்கொடுத்தோர் ரூ. 6,508,329 ஆக மொத்தம் ரூ.6,907,852 ஆக மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் சரிசெய்யப்படவில்லை. | செலுத்தப்பட வேண்டிய கணக்கு மிகுதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். | நிதி கிடைத்தவுடன் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். |

3.4 <u>கொள்வனவு திட்டம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ----------------------------- | -------------------------------- | ------------------ |
| மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டில் கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்தில் சரியான கொள்வனவு திட்டத்தை தயாரிக்க நடவடிக்கையெடுப்பேன். |

4. <u>கணக்கீடுகள் தொடர்பான செயற்பாடு மற்றும் நல்லாட்சி</u>

4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 ஆண்டின் ஜூன் மாதம் திகதி மற்றும் இல. டிஎம்.ஏ ∴2009(01) கொண்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கைக்கமைவாக காலாண்டுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்கள் 01 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றுநிருபத்தின் அறிவுறத்தல்களுக்கமைவாக கருமமாற்ற வேண்டும். | நான்கு காலாண்டுகளுக்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டிகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. |